# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 19 வியாழக்கிழமை 03.07.2025 கதிர் 243



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு - Yarl Muttram Youtube Channel




# செம்மணி மனிதப் புதைகுழிக்கு நீதி வேண்டும்!



## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 03

செம்மணி மனிதப் புதைகுழிக்கு நீதி கிடைக்க வேண்டும் என்று அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ வலியுறுத்தினார்.

செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் அரசின் நிலைப்பாடு என்னவென வினவப்பட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம் தொடர்பில் கடந்த ஜூன் 29 ஆம் திகதி வழக்கு விசாரணை இடம்பெற்றது. அரச தரப்பில் இருந்து சி.ஐ.டி. மற்றும் நீதி அமைச்சால் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான வழக்கு விசாரணைக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்படும். தேவையான சாட்சிகள் முன்வைக்கப்படும்.

7

# கச்சதீவை இந்தியா மீளப்பெற முடியாது!

## இலங்கை அரசு திட்டவட்டம்

கொழும்பு, ஜூலை 03

“கச்சதீவு என்பது இலங்கைக்குச் சொந்தமானது. அதனை இந்தியா மீளப்பெறுவதற்கு ஏதுவான சூழ்நிலை எதுவும் இல்லை.” - என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

கச்சதீவு விவகாரம்தொடர்பில்இந்திய வெளிவிவகார அமைச்சரால் முன்வைக்கப்பட்டுள்ள கருத்து குறித்தும், கச்சதீவு மீளப்பெறக் கூடிய சூழ்நிலை உள்ளதா எனவும் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

7





## துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் உயிரிழப்பு

### மற்றொருவர் படுகாயம்

கம்பஹா, ஜூலை 03

கம்பஹா மாவட்டம், கந்தானையில் இன்று இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கந்தானை பொதுச் சந்தைக்கு அருகில், காரில் இருந்த

7



## மேர்வின் சில்வா உட்பட மூவர் இன்று பிணையில் விடுவிப்பு!

கொழும்பு, ஜூலை 03

கிரிபத்கொடை பிரதேசத்தில் உள்ள காணி ஒன்றுக்குப் போலி ஆவணங்களைத் தயாரித்துப் பண மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா உள்ளிட்ட மூவரைப் பிணையில் விடுதலை செய்யுமாறு கம்பஹா மேல் நீதிமன்றம் இன்று வியாழக்கிழமை உத்தரவிட்டுள்ளது.

7

## இராமேஸ்வரம் மீனவர்களுக்கு ஜூலை 17 வரை மறியல் நீடிப்பு

மன்னார், ஜூலை 03

இலங்கைக்கடற்பரப்பினுள்எல்லை தாண்டி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட எட்டு தமிழக மீனவர்களுக்கும் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது

கடந்த 29 ஆம் திகதி மன்னார் கடற்பரப்பில் கைது

7



## மனைவி, மாமியாரைக் கத்தியால் குத்திய குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

### வவுனியாவில் சம்பவம்

வவுனியா, ஜூலை 03

வவுனியா, சமயபுரம் பகுதியில் தனது மனைவியையும், மனைவியின் தாயாரையும் கத்தியால் குத்திக் காயப்படுத்திய குடும்பஸ்தர் ஒருவர் கிணற்றில்

7



- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -



# சிறந்த உணவு பட்டியலில் இலங்கைக்கு 69வது இடம்

கொழும்பு, ஜூலை 03

உலகில் சிறந்த உணவு, சிறந்த உணவு கொண்ட நாடுகள் மற்றும் நகரங்களின் பட்டியலை, தனியார் பயண வழிகாட்டி நிறுவனமான 'டேஸ்ட் அட்லஸ்' வெளியிட்டுள்ளது.

100 நாடுகள் உள்ளடங்கிய இந்த பட்டியலில், 4.6 புள்ளிகளுடன் கிரீஸ் முதலிடத்தில் உள்ளது. இலங்கைக்கு 69வது இடத்தில் உள்ளது.

இத்தாலி, மெக்சிகோ, ஸ்பெயின், போர்ச்சுக்கல் ஆகிய நாடுகள் அடுத்த நான்கு இடங்களைப் பிடித்துள்ளன. துருக்கி, இந்தோனீசியா, பிரான்ஸ், ஜப்பான், சீனா ஆகிய நாடுகள் 6 முதல் 10 வரையிலான இடத்தை பிடித்துள்ளது.

போலந்து 11வது இடத்தையும், 4.42 புள்ளிகளுடன் இந்தியா 12வது இடத்தையும், அமெரிக்கா 13வது இடத்தையும், இலங்கை 69வது இடத்தையும் பிடித்துள்ளது.

இந்தியாவின் சிறந்த உணவுகளாக ரொட்டி, நான் (**naan**), சட்னி, பிரியாணி, பருப்பு, பட்டர் கோழி, தந்தூரி கோழி ஆகியவை குறிப்பிடப்பட்டுள்ளன.

உலகளவில் சிறந்த உணவுகளில், கொலம்பியாவின் **Lechona** என்ற பன்றி இறைச்சி உணவு முதலிடத்தையும், இத்தாலி **apd; Pizza Napoletana** 2வது இடத்தையும் பிடித்துள்ளது.

# பாலத்தில் கவிழ்ந்த லொறி

கொழும்பு, ஜூலை 03

மண்டபம் வடக்கு மீன்பிடி துறைமுகத்துக்கு செல்லும் பாலத்தின் ஊடாக மினி லொறி ஒன்று தண்ணீர் மற்றும் மீன்பிடி வலை போன்ற பொருட்களை ஏற்றிச் சென்ற போது பாலம் இடிந்து விழுந்ததில் லொறி கடலுக்குள் தலை கீழாக கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் இருவர் படுகாயமடைந்த சம்பவம் புதன்கிழமை அன்று காலையில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.



இராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் வடக்கு கோயில் வாடி மீன்பிடித் துறைமுகத்திற்கு செல்வதற்காக கடலுக்கு நடுவே பாலம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த பாலம் அமைக்கப்பட்டு சுமார் 50 ஆண்டுகாலம் கடந்துள்ள போது பாலம் மிகவும் பழுதடைந்து மோசமான நிலையில் இருப்பதால் உடனடியாக பழைய பாலத்தை அப்புறப்படுத்தி விட்டு புதிய பாலம் அமைத்து தரும்படி மீனவர்கள் மாவட்ட நிர்வாகத்திற்கு தொடர்ந்து கோரிக்கை வைத்து வந்தனர்.

இந்த நிலையில் புதன்கிழமை அன்று காலை வழக்கம் போல் வடக்கு மீன்பிடி துறைமுகத்திலிருந்து மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்கு செல்ல தயாராகுவதற்காக ஐஸ், மீன்பிடி வலை, உணவு பொருட்கள், குடி தண்ணீர் உள்ளிட்டவற்றை ஏற்றிக் கொண்டு பாலத்தின் ஊடாக பிரயாணித்த போது திடீரென தண்ணீர் வண்டியின் பாரம் தாங்காமல் பாலம் உடைந்து லொறி தலை கீழாக கடலுக்குள் விழுந்ததையடுத்து அதன் சாரதி மற்றும் உதவியாளர் படுகாயமடைந்ததுடன் உயிர் தப்பினர்.

இதனையடுத்து அவர்களையும் விபத்துக்குள்ளான லொறியையும் மீனவர்கள் மற்றும் பொலிஸார் இணைந்து மீட்டுள்ளனர்.

இதேவேளை மீன்பிடிக்கச் செல்லும் படகுகளுக்கு மீனவர்களும் மற்றும் மீன்பிடி உபகரணங்கள் கொண்டு செல்ல முடியாமல் மீனவர்கள் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)





# கட்டுமானங்களால் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள சிகிரியா!

கொழும்பு, ஜூலை 03

உலக பாரம்பரிய தளமான சிகிரியாவை பாதிக்கும் அங்கீகரிக்கப்படாத கட்டுமானங்களை அகற்றுவதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதாக தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் டி. துசித மெண்டிஸ் தெரிவித்தார்.

சிகிரியா தற்போது உலக பாரம்பரிய பட்டியலில் இருந்து நீக்கப்படும் அபாயத்தில் இல்லை என்றாலும், இந்த அங்கீகரிக்கப்படாத கட்டுமானங்கள் எதிர்காலத்தில் சிகிரியாவிற்கு அச்சுறுத்தலாக இருக்குமெனவும் அவர் குறிப்பிட்டார்.

மத்திய மாகாணத்தின் மாத்தளை மாவட்டத்தில் அமைந்துள்ள, பாரம்பரிய மதிப்புமிக்க இடமான சிகிரியா, இலங்கையின் அதிசயங்களை ஆரம்ப காலம் முதல் இன்றுவரை உலகிற்கு நிரூபித்த ஒரு சிறந்த சின்னமாகும்.

கி.பி 5 ஆம் நூற்றாண்டில் காசியப்பன் மன்னரால் ஒரு இராஜ்ஜியமாகவும் திட்டமிடப்பட்ட நகரமாகவும் மாற்றப்பட்ட சிகிரியா பாறையின் கட்டிடக்கலை, கட்டிடக்கலை அமைப்புகள் மற்றும் சுவரோவியங்கள் உலகின் அவதானத்தை ஈர்த்தன.


சிகிரியாவில் காணப்படும் சிறப்புமிக்க நிர்மாணிப்பாக கண்ணாடிச்சுவர் காணப்படுகின்றது. இதில் எழுத்துருக்கள் மற்றும் இலங்கையின் எழுத்தாக்கத் துறை வரலாற்றின் சிறப்பு இருகின்றது. இது சிகிரியா பற்றிய பல தகவல்களை தெரியப்படுத்துகின்றது. 500 பெண்களின் உருவங்களை ஓவியங்களாக வரையப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

அதன்படி, சிகிரியா 1982 ஆம் ஆண்டில் யுனெஸ்கோவின் உலக பாரம்பரிய தளமாக அறிவிக்கப்பட்டது,

இது மிகப்பெரிய உள்ளூர் மற்றும் சர்வதேச அவதானத்தை ஈர்த்துள்ளது.

இருப்பினும், சிகிரியாவைச் சுற்றி நாளுக்கு நாள் கட்டப்பட்டு வரும் அங்கீகரிக்கப்படாத கட்டுமானங்கள் சிகிரியாவை யுனெஸ்கோ உலக பாரம்பரிய பட்டியலில் இருந்து நீக்கும் அபாயத்தை அதிகரித்துள்ளதாக பல தேசிய நாளேடுகள் இன்று செய்தி வெளியிட்டுள்ளன. (ஐ)

# இந்தியாவுக்கு தப்பியோடிய மூவர் நாடுகடத்தல்



இலங்கையில் இருந்து படகு வழியாக தமிழகத்துக்குள் புகுந்த சிவில் பாதுகாப்புத் திணைக்கள உத்தியோகத்தர் உள்ளிட்ட மூவரையும் இந்தியா உடனடியாகவே நாடு கடத்தியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த நான்கு நாட்களுக்கு முன்னர் இலங்கையில் இருந்து படகு மூலம் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் உத்தியோகத்தர் உள்ளிட்ட மூவர் தமிழகத்துக்குச் சென்றனர்.

இலங்கையில் குற்றச் செயல்களுடன் தொடர்பு மன்னார் - பேசாலையில் இருந்து படகு மூலம் மூன்று நபர்கள் இந்தியாவின் மணல்தீடையில் தஞ்சம் அடைந்ததாக தமிழகப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மீட்டனர்.

இதனையடுத்து தமிழகப் பொலிஸார் மூன்று நபர்களிடம் விசாரணை நடத்தியதன் அடிப்படையில் ஒருவர் முல்லைத்தீவு-உடையார்கட்டு பகுதியைச் சேர்ந்த சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் உத்தியோகத்தர் எனவும், ஏனைய இருவரும் புத்தளம் பகுதியைச் சேர்ந்த சிங்களவர்கள் எனவும் கண்டறியப்பட்டனர். அவர்கள் மூவரும் இலங்கையில் குற்றச் செயல்களுடன் தொடர்புபட்டதான தகவலும் தமிழகப் பொலிஸாருக்குக் கிடைத்தது. இவற்றின் அடிப்படையில் மேற்படி மூவரும் நேற்று மாலை விமானம் மூலம் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டதாக கூறப்படுகின்றது. (ஐ)

# ஏழு நாடுகளில் இருந்து வரவுள்ள மருந்துகள்

கொழும்பு, ஜூலை 03

இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், துருக்கி, இந்தோனேசியா மற்றும் தாய்லாந்து உள்ளிட்ட ஏழு நாடுகள், அந்தந்த நாடுகளின் சட்ட ஒழுங்குகளுக்கு அமைய, இலங்கைக்கு மருந்துகளை விநியோகிக்க ஒப்புக்கொண்டுள்ளதாக, அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

மருந்துகளை கொள்வனவு செய்வது தொடர்பில், நான்கு நாடுகளுடன் ஏற்கனவே புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய, பாகிஸ்தான், பங்களாதேஷ், இந்தியா மற்றும் இந்தோனேசியா ஆகிய நாடுகள், இதுவரையில் 113 மருந்துகளின் பட்டியலை சமர்ப்பித்துள்ளன.

இலங்கை மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் அனுமதிக்கமைய இந்த மருந்துகள் கொள்வனவு செய்யப்படவுள்ளன. (ஐ)





# லொறி – டிப்பர் விபத்தில் ஒருவர் காயம்

கொழும்பு, ஜூலை 03

லொறியும் டிப்பரும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளான சம்பவம் வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரிதிதென்ன பிரதான வீதி, பஸ் டிப்போவுக்கு அருகாமையில் வியாழக்கிழமை (3) அன்று இடம்பெற்றுள்ளது.

கொழும்பிலிருந்து வந்த லொறியுடன் எதிரே வந்த டிப்பர் மோதியுள்ளதுடன் இதில், லொறி சாரதி காயமடைந்த நிலையில் பொலன்னறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், டிப்பரை செலுத்தி வந்த சாரதி விபத்து நடந்த இடத்தை விட்டு தப்பிச் சென்றுள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர. (ஐ)

# கழுத்தை அறுத்து நகை பறிப்பு – பெண் பரிதாப மரணம்

குருவிட்ட பொலிஸ் பிரிவில் தெவிபஹல, தொடன்எல்ல வீதியில், அடையாளம் தெரியாத ஒருவர் பெண்ணொருவரின் கழுத்தை அறுத்து நகையைப் பறித்து சென்றுள்ளதாக குருவிட்ட பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் காயமடைந்த பெண் இரத்தினபுரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் 26 வயதுடைய தெவிபஹல, குருவிட்ட பிரதேசத்தைச் சேர்ந்த பெண்ணொருவரே மரணித்துள்ளார்.

சடலம் தற்போது இரத்துனபுரி வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதோடு, தப்பிச்சென்ற சந்தேகநபரை கைது செய்ய குருவிட்ட பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

# விபத்துக்களில் சிக்கும் சிறுவர்கள்

*கொழும்பு, ஜூலை 03*

*விபத்துகளில் சிக்கும் சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் சிறுவர் வைத்தியரான பேராசிரியர் ருவந்தி பெரேரா தெரிவித்தார்.*

*திடீர் விபத்துகளுக்கு உள்ளாகும் சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் சிறுவர் வைத்தியரான பேராசிரியர் ருவந்தி பெரேரா தெரிவித்தார்.*

*இவற்றில் பெரும்பாலான விபத்துக்கள் அறியாமை மற்றும் சோதனை செய்து பார்ப்பதன் ஊடாக இடம்பெறுவதாக அவர் தெரிவித்தார்.*

*தேசிய விபத்து தடுப்பு வாரத்தை முன்னிட்டு சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பங்கேற்றுப் பேசிய போதே பேராசிரியர் ருவந்தி பெரேரா இந்த விடயத்தை குறிப்பிட்டார்.*

*தெற்காசிய நாடாக இலங்கையில் மிக உயர்ந்த மட்டத்தில் உள்ளது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக, நம் நாட்டில் உள்ள தரவுகளைப் பார்க்கும்போது, விபத்துகளால் சிறுவர்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் அதிகரித்து வருகின்றன. நாங்கள் 16 வயது வரை சிறுவர்களாக பார்க்கிறோம். இதை பெரும்பாலும் இரு வெவ்வேறு வயதுக் குழுக்களாக பிரிக்கலாம். 2 முதல் 3 வயது வரையிலான அறியாமையால் ஏற்படும் விபத்துகள். அடுத்ததாக, 12–14 வயதுடையவர்கள் இளமைப் பருவத்தில் நுழையும் போது மேற்கொள்ளும் சோதனை நடவடிக்கைகளால் ஏற்படும் ஆபத்துகள். விபத்துகள் பல வடிவங்களில் வருகின்றன. விழுதல், சுளுக்கு மற்றும் தீக்காயங்கள் ஆகியவை சிறுவர்கள் எதிர்கொள்ளும் மிகவும் பொதுவான விபத்துகளில் அடங்கும்.*

*விபத்துகளைத் தடுப்பதற்காக சிறுவர்களுக்கு அறிவுறுத்த வேண்டியதன் அவசியம் குறித்தும் பேராசிரியர் ருவந்தி பெரேரா சுட்டிக்காட்டினார். (ஐ)*

# ஜூலை 19ல் அனைத்துக்கட்சி கூட்டம்: எதிர்க்கட்சிகளுக்கு மத்திய அரசு அழைப்பு



ஜூலை 19ல் அனைத்துக்கட்சி கூட்டம் நடைபெறும் என மத்திய அரசு அறிவித்துள்ளது. எதிர்க்கட்சிகளுக்கு மத்திய அரசு அழைப்பு விடுத்துள்ளது.

பார்லிமென்ட் மழைக்கால கூட்டத்தொடரை வரும் ஜூலை 21 ல் முதல் ஆக., 21 வரை நடத்துவதற்கு ஜனாதிபதி ஒப்புதல் அளித்துள்ளார். சுதந்திர தினத்தை கருத்தில் கொண்டு ஆக., 13, 14 ஆகிய தேதிகளில் கூட்டத்தொடர் நடைபெறாது.

வரும் 21ம் தேதி காலை 11 மணிக்கு பார்லிமென்ட் கூட உள்ள நிலையில் இந்த தொடரில் விவாதங்கள் அனல் பறக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. கூட்டத்தொடரில் பஹல்காம் பயங்கரவாத தாக்குதல் உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்து எதிர்க்கட்சிகள் விவாதிக்க திட்டமிட்டுள்ளது.

இந்நிலையில், ஜூலை 19ல் அனைத்துக்கட்சி கூட்டம் நடைபெறும் என மத்திய அரசு அறிவித்துள்ளது. ஜூலை 21ம் தேதி பார்லி., மழைக்கால கூட்டத்தொடர் நடைபெற உள்ள நிலையில் மத்திய அரசு அழைப்பு விடுத்துள்ளது.

மழைக்கால கூட்டத் தொடரை சுமூகமாக நடத்துவது தொடர்பாக ஆலோசிக்கப்பட உள்ளது. (ஐ)

## ஓரணியில் தமிழ்நாடு பிரசாரம் துவக்கம்: மக்களை வீடு வீடாக சென்று சந்தித்தார் முதல்வர் ஸ்டாலின்!



ஓரணியில் தமிழ்நாடு பிரசார இயக்கத்தை முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார். சென்னை ஆழ்வார் பேட்டையில் வீடுவீடாகச் சென்று முதல்வர் ஸ்டாலின் மக்களை சந்தித்தார்.

தி.மு.க., சார்பில் ஓரணியில் தமிழ்நாடு எனும் தலைப்பில், தமிழக முழுவதும் பொதுக்கூட்டங்களை நடத்தவும், தி.மு.க., அரசின் 4 ஆண்டுகால சாதனைகளை கூறவும், உறுப்பினர்களை சேர்க்கவும், தி.மு.க., தலைவர் ஸ்டாலின் தன் கட்சியினருக்கு உத்தரவிட்டார்.

இந்நிலையில் இன்று (ஜூலை 03) ஓரணியில் தமிழ்நாடு இயக்கத்தை முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார். சென்னை ஆழ்வார் பேட்டையில் வீடு வீடாகச் சென்று முதல்வர் ஸ்டாலின் மக்களை சந்தித்தார். சந்தித்த பெண்களிடம் எல்லாம், பஸ்களில் இலவச பயணம் செல்கிறீர்களா என்று கேட்டார். மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் 208 நகர்ப்புற நல்வாழ்வு மையங்கள் மற்றும் 50 ஆரம்ப சுகாதார மையங்களை முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்தார். (ஐ)

## கட்சி நிர்வாகிகளை நீக்க எனக்கே அதிகாரம் ராமதாஸ் திட்டவட்டம்



"பா.ம.க., நிர்வாகிகளை நீக்க எனக்கே அதிகாரம் உள்ளது கட்சியிலிருந்து அருளை அன்புமணி நீக்க முடியாது" என பா.ம.க., நிறுவனர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

விழுப்புரம் மாவட்டம், தைலாபுரத்தில் நிருபர்கள் சந்திப்பில் ராமதாஸ் கூறியதாவது: பா.ம.க., நிர்வாகிகளை நீக்க எனக்கு மட்டுமே அதிகாரம் உள்ளது. எம்.எல்.ஏ., அருளை நீக்கும் அதிகாரம் அன்புமணிக்கு இல்லை. ஜி.கே.மணி மூலம் கடிதம் கொடுத்த பிறகு தான் நீக்க முடியும்.

கட்சியில் இருந்து யாரையும் நீக்கும் அதிகாரம் அன்புமணிக்கு இல்லை. என் மனம் வேதனைப்படும் அளவு செய்கின்றனர். எல்லாவற்றையும் புறம் தள்ளிவிட்டு, நான் கட்சியை வழி நடத்தி கொண்டு இருக்கிறேன். கட்சியின் இணை செயலாளர் பொறுப்பில் அருள் தொடர்வார்.

பூம்புகாரில் ஆகஸ்ட் 10ம் தேதி பா.ம.க., மகளிர் மாநாடு நடத்துகிறோம். அ.தி.மு.க., தி.மு.க., உடன் பா.ம.க., கூட்டணி பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது என பரவும் தகவல் வதந்தி. பா.ம.க., செயற்குழு, பொதுக்குழு கருத்துகளை கேட்ட பிறகு தான் கூட்டணி குறித்து பதில் சொல்ல முடியும். இவ்வாறு அவர் கூறினார். (ஐ)





## புது கணவன்களை கொல்லும் புது மனைவிகள்

சமீபத்தில் கணவன்மார்களை கள்ளக்காதலனுடன் சேர்ந்து கொலை செய்யும் சம்பவம் தொடர் கதையாகிறது. மத்திய பிரதேசம் இந்தூர் பகுதியை சேர்ந்த சோனம் ரகுன்ஷி என்ற பெண்மணி தனது தேனிலவில் கனவனை கள்ளக்காதலனுடன் சேர்ந்து கொன்ற சம்பவம்பரபரப்பை ஏற்படுத்தி உள்ள நிலையில் தற்போது பீகாரில் ஒரு கொலை சம்பவம் அரங்கேறி உள்ளது.

பீகாரின் அவுரங்காபாத் மாவட்டத்தை சேர்ந்தவர் குஞ்சா. குடும்ப ஒப்புதலுடன் கடந்த மே மாதம் பிரியான்ஷுவுடன் திருமணம் நடந்தது. திருமணமான 45 நாட்களுக்குப் பிறகு, புது மனைவி, தனது காதலன் (மாமா உறவுமுறையை சேர்ந்த உறவினர்) உடன் சேர்ந்து, தனது கணவரைக் கொலை செய்ய சதித்திட்டம் தீட்டினார்.

இதன்படி கடந்த ஜூன் 24ம் திகதி இரவு நபிநகர், லெம்போகாப் பகுதியின் அருகில் பிரியான்ஷு சுட்டுக் கொல்லப்பட்டார். இந்த வழக்கை போலீசார் விசாரித்தனர். விசாரணையில் திடுக் தகவல் வெளியாகி உள்ளது.

தனது சொந்த மாமா ஜீவன் சிங்குடன் குஞ்சா தவறான நட்பில் நீண்ட நாள் பழகி உள்ளார். திருமணத்திற்குப் பிறகு, கணவர் பிரியான்ஷு அவர்களின் உறவுக்கு ஒரு தடையாக மாறினார். இதன் காரணமாக, குஞ்சாவும் ஜீவனும் சேர்ந்து கூலிப்படையை ஏவி கணவனை சுட்டு கொன்றனர்.

இந்த தகவலை மாவட்ட எஸ்.பி., அம்ப்ரிஷ் ராகுல் தெரிவித்தார்.

கொலை சதியில் தனது பங்கை குஞ்சா போலீசாரிடம் ஒப்புக்கொண்டார். குஞ்சாவும், ஜீவனும் தொடர்ந்து தொடர்பில் இருந்ததாகவும், ஜீவன் துப்பாக்கிச் சூடு நடத்தியவர்களுடன் பேசி கொலையைத் திட்டமிட்டதாகவும் போலீசாரிடம் தெரிவித்துள்ளார். இறந்த பிரியான்ஷு மனைவி குஞ்சா சிங் உட்பட மூன்று பேரை போலீசார் கைது செய்தனர்.

(ஐ)



# டைனோசர் உலகம்!

சிறியவர் முதல் பெரியவர் வரை அனைவரும் வியக்கும் ஒரு பிரம்மாண்ட உயிரியான டைனோசர்கள் இப்போது மனிதர்கள் வாழும் காலத்தில் நாய், பூனையைப் போல் சக உயிரியாக வாழ்ந்தால் எப்படி இருக்கும்! கேட்பதற்கே சுவாரசியமாக இருக்கும் இந்த கற்பனையை அடிப்படையாக கொண்டு உருவான படம்தான் ஜுராசிக் பார்க். இந்தப் படத்தைப் பார்த்துவிட்டு, எப்படி இப்படி ஒரு கற்பனை தோன்றியது, அதுவும் தோன்றிய கற்பனையை எப்படி இப்படித் தத்ரூபமாகப் படம்பிடிக்க முடிந்தது என்பதைப் பற்றிப் பல முறை யோசித்துப் பார்த்திருக்கிறேன். ஜுராசிக் பார்க் வெறும் ஃபேன்டசி படம் மட்டுமல்ல அதையும் தாண்டி அந்தப் படம் மனிதகுலத்திற்குப் பல கேள்விகளை எழுப்பியுள்ளது.

டைனோசரின் தாயனையில் விடுபட்ட இடங்களை வேறோர் உயிரியின் தாயனையைக் கொண்டு நிரப்பி மீண்டும் இந்த உலகிற்கு டைனோசர்களைக் கொண்டு வரும் அறிவியல் ஆராய்ச்சி குழுவிற்கும் இயற்கைக்கும் நடுவே நடக்கும் போராட்டம்தான் படம். அழிந்துப் போன உயிரினத்தை மீண்டும் உயிர்ப்பிக்க வைப்பதால் ஏற்படும் விளைவுகளை அழகாக காட்சிப்படுத்திய ஸ்டீவன் ஸ்பில்பர்க்கை பாராட்டாமல் இருக்க முடியாது. ஒருவேளை அந்தப் படத்தில் நடந்த நிகழ்வுகள் நிஜமாகவே நடந்திருந்தால் என்ன ஆகியிருக்கும்? ஏன் சில உயிரினங்கள் சில காலங்களுக்குப் பிறகு தானாகவே அழிந்துவிடுகின்றன. எப்படி டைனோசரின் தாயனை, வேறோர் உயிரியின் தாயனையை ஏற்றுக்கொண்டது போன்ற பல கேள்விகளுக்குப் பதிலாக இருப்பது பரிணாம வளர்ச்சிதான்.



இந்த உலகின் அத்தனை உயிர்களும் ஏதோ ஒரு சிறு புள்ளியில் இருந்துதான் தொடங்கியது. இந்த உயிர்கள் அனைத்தும் ஒன்றோடு இன்னொன்று தொடர்புடையதாகவும், ஒன்றை இன்னொன்று சார்ந்து இருப்பதும்தான் இயற்கை. பூச்சிகளைத் தவளை உண்பதும், தவளையைப் பாம்பு புசிப்பதும், பாம்பைக் கழுகு சுவைப்பதும்தான் உணவுச் சங்கிலி. இதில் ஏதேனும் ஒன்று நடக்கவில்லை என்றாலும்கூட இயற்கையின் சமநிலை குலைந்து இந்த உலகம் முழுவதும் ஒரு குறிப்பிட்ட உயிரினத்தால் நிரம்பி வழிந்திருக்கும். தற்போது இருக்கும் சூழலில் மனிதன்தான் மற்ற உயிர்களின் மேல் ஆதிக்கம் கொண்டவனாக இருக்கிறான். அப்படி இருக்கையில் ஒருவேளை டைனோசர்கள் அழியாமல் இருந்திருந்தால் அவைதான் இந்த உலகின் சக்தி வாய்ந்த உயிரியாக இருந்திருக்கும். மனிதன் அதன் முன் ஒரு சிறு துரும்பை போல தெரிந்திருப்பான்.

முக்காலமும் உணர்ந்த இயற்கை அந்தந்த சூழலுக்கேற்ப தன்னைத் தானே அவ்வப்போது புதிப்பித்துக்கொள்கிறது. இதன் விளைவுதான் இங்கே சில உயிரிகள் அழிவதும், சில உயிரிகள் உருவாவதும். ஆவதும் அழிவதும் இயற்கையாகவே அரங்கேறுகிறது. எழுத்தாளர் ஜெயமோகன் எழுதிய அறம் சிறுகதை தொகுப்பிலிருந்து 'யானை டாக்டர்' சிறுகதையில் யானை டாக்டரான 'டாக்டர் கிருஷ்ணமூர்த்தி', சிறுத்தையால் தாக்கப்பட்டு சாகும் தருவாயில் இருக்கும் ஒரு செந்நாயைப் பரிசோதித்துவிட்டு எந்த முதலுதவியும் செய்யாமல் திரும்புவார். அது ஏன் என்று கேட்கும்போது, "செந்நாயின் காலை சிறுத்தைத் தாக்கியிருக்கிறது. என் வேலை அடிபட்ட செந்நாயிடம் இருந்து வழக்கத்திற்கு மாறாக ஏதேனும் தொற்று பரவுவதற்கான வாய்ப்பிருக்கிறதா என்பதைப் பரிசோதிப்பதும், இந்த நிகழ்வில் மனிதனின் செயல் ஏதும் இருக்கிறதா, அப்படி இருந்தால் அந்த நபரைக் கண்டறிந்து தண்டிப்பதும் மட்டும்தான் நாம் செய்ய வேண்டிய கடமைகள். இவை எல்லாவற்றையும் தாண்டி இதுதான் அவற்றின் வாழ்க்கை. அவை இதற்குப் பழக்கப்பட்டவை" என்பார்.

இந்த உலகில் இருக்கும் உயிர்களின் தாயனைகள் அனைத்தும் ஒன்றோடு இன்னொன்று தொடர்புடையவை. இதுதான் பரிணாம வளர்ச்சியின் அடிப்படை. மனிதனின் தாயனையும் சிம்பன்சியின் தாயனையும் 98.8 சதவீதம் ஒத்துப்போகிறது. குரங்கில் இருந்து மனிதன் தோன்றினான் என்பதற்கு இதுதான் சான்றாகவும் விளங்குகிறது. ஓர் உயிரினம் முற்றிலுமாக இந்த உலகில் இருந்து அழிவதில்லை. அது வேறோர் உயிரினமாகப் பரிணாம வளர்ச்சி அடைகிறது. அப்படி அழிந்து போன டைனோசர்கள்தாம் தற்போதிருக்கும் பறவைகளின் மூதாதையர்கள்.

> **இந்த உலகில் இருக்கும் உயிர்களின் தாயனைகள் அனைத்தும் ஒன்றோடு இன்னொன்று தொடர்புடையவை. இதுதான் பரிணாம வளர்ச்சியின் அடிப்படை. மனிதனின் தாயனையும் சிம்பன்சியின் தாயனையும் 98.8 சதவீதம் ஒத்துப்போகிறது. குரங்கில் இருந்து மனிதன் தோன்றினான் என்பதற்கு இதுதான்**

இந்த உயிரினத்தில் இருந்துதான் இந்த உயிரினம் பரிணாம வளர்ச்சி அடைந்தது என்பதைக் கண்டறிய தாயனைதான் முக்கிய சாட்சி. தாயனையை ஒப்பிட்டும், தோற்ற ஒற்றுமையை வைத்தும் உயிரினங்களின் பரிணாம வளர்ச்சியை அறியலாம். பல்லாயிர வருடங்களுக்கு முன்னால் வாழ்ந்த உயிரினங்களின் தொல்லியல் சாட்சிகள் கிடைக்கப்பெறும் போது அதை வைத்து அந்த உயிரினத்தின் காலம், தோற்றம், பரிணாம வளர்ச்சி போன்றவற்றைக் கணிக்க முடியும். இந்த அறிவியல் பிரிவை பாலியன்டாலஜி (ீயடநழவெழடழபல) என்பர்.

சுற்றுச்சூழலுக்கேற்ப ஏற்படும் தாயனை மாற்றத்தால்தான் பரிணாம வளர்ச்சி ஏற்படுகிறது. போலார் கரடிகளின் அடர்த்தியான வெண் ரோமங்கள், கடும் குளிரைத் தாங்குவதற்காக உருவானவை. அதே போல வேட்டையாடி உண்ணும் மிருகங்களின் பற்கள் கூர்மையாக இருப்பதும் பரிணாம வளர்ச்சியின் அறிகுறிதான். வாழ்வியலுக்கும் சூழலுக்கும் ஏற்ப தாயனையில் மாற்றங்கள் ஏற்பட்டு, அது தனித்துவமான சில



அம்சங்களை அந்தந்த உயிரினங்களுக்கு அளிக்கிறது. பூமியின் தட்பவெப்ப நிலையில் மாற்றம் ஏற்படும் போது சுற்றுச்சூழலில் மாற்றம் ஏற்படுகிறது. அந்தச் சுற்றுச்சூழல் மாற்றத்தை ஏற்றுக்கொள்வதற்கும் பழகிக்கொள்வதற்கும் உடலில் தாயனை மாற்றங்கள் ஏற்படுகின்றன. இதுதான் உயிர்கள் பரிணாம வளர்ச்சி அடைவதற்கு காரணம். பாலைவனங்களில் வாழும் ஒட்டகங்களின் திமில்களும் கண் இமைகளும் பாத வடிவமும்கூட அந்தச் சூழலுக்கு உகந்ததாக இருக்க வேண்டும் என்று தனித்துவமாக பரிணாமத்தில் உருவானவைதாம்.

மனிதர்களுக்குள்ளும் எண்ணற்ற வித்தியாசங்கள் இருப்பதற்கு காரணம் இந்தச் சுற்றுச்சூழலும் அதற்கேற்ப தீர்மானிக்கப்பட்ட தாயனையும். இந்த உலகில் இருக்கும் எல்லா உயிர்களின் தாயனையும் தனித்துவமானது. அதுதான் தடயவியலின் (கழசநளளைஉ) அடிப்படை. குற்றம் நடந்த ஓர் இடத்தில் கிடைக்கும் தலைமுடி, நகம் முதலியவற்றிலிருந்து கிடைக்கும் தாயனையை வைத்து குற்றவாளியைக் கண்டறிவதுதான் தடயவியல். உடலில் இருக்கும் ஒவ்வொரு செல்லிலும் தாயனை இருப்பதால் முடி, நகம், ரத்தம் முதலியவற்றில் இருந்து தாயனையைச் சேகரிக்க முடியும். ஒருவரின் தாயனையை வைத்து அவருக்குப் பிற்காலத்தில் வரும் நோய்களைத் தீர்மானிக்கும் அளவிற்குத் தொழில்நுட்பம் வளர்ந்திருக்கிறது. அதுவும் குறிப்பாக மரபணு சார்ந்த நோய்களையும் சில வகை புற்று நோய்களையும் முன்கூட்டியே கண்டறிய முடியும். இத்தனை வசதிகளும் தொழில்நுட்பமும் இருக்கின்றன என்கிற சந்தோஷம் ஒருபுறம் இருந்தாலும், இவை அனைத்தும் தவறாகப் பயன்படுத்தப்படக் கூடாது என்னும் பொறுப்பும் ஒருபுறம் இருக்கிறது.

இயற்கையோடு ஒன்றி வாழும் வாழ்வே வளமானது. இயற்கைக்கு எதிராக மனிதன் செய்யும் ஒவ்வொரு செயலிலும் இயற்கையின் சமநிலை உடைந்து, அது சரி செய்ய முடியாத பெரும் விளைவுகளை ஏற்படுத்தும் என்பதுதான் ஜுராசிக் பார்க் நமக்குச் சொல்லாமல் சொல்லும் பாடம். தாயனையில் ஒன்றைத் திருத்தப் போய் அதைச் சமன் செய்ய இயற்கை எடுக்கும் கடினமான முடிவுகளைக் கணிக்கும் அளவிற்கு இன்னும் மனிதன் பரிணாம வளர்ச்சி அடையவில்லை. இந்த உண்மையை உணர்ந்து இயற்கையை ஆக்கப்பூர்வமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

# டிரம்புக்கு எதிராக குரல் கொடுத்த ஒபாமா: மருத்துவ மசோதாவை நிராகரிக்க வலியுறுத்தல்



டிரம்ப் நிர்வாகத்தின் புதிய மசோதாவுக்கு எதிராக மக்கள் ஓட்டளிக்க வேண்டும் என்று அமெரிக்க மாஜி அதிபர் பராக் ஒபாமா வலியுறுத்தி உள்ளார்.

அமெரிக்க அதிபரானது முதல் பல்வேறு அதிரடி அறிவிப்புகள், நடவடிக்கைகளை எடுத்து வரும் டிரம்ப், தற்போது வரிகுறைப்பு மசோதா ஒன்றை நடைமுறைப்படுத்தும் நடவடிக்கைகளில் இறங்கி உள்ளார். பிக் பியூட்டிபுல் என்ற பெயர் கொண்ட இந்த மசோதாவுக்கு அந்நாட்டு செனட் சபை ஒப்புதல் அளித்துள்ளது.

ஆனால், மசோதாவுக்கு தொழிலதிபர் எலான் மஸ்க் உள்ளிட்ட பலரும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். அதே தருணத்தில் நிதி ஆதாரத்தை பெருக்கும் வகையில், மருத்துவ உதவி நிதியை குறைக்கும் மசோதாவை மெடிக் எய்ட் (அநனைஉ யனை) என்ற பெயரில் டிரம்ப் கொண்டு வந்துள்ளார்.

இந்த மசோதாவுக்கு அமெரிக்க மாஜி அதிபர் பராக் ஒபாமா எதிர்ப்பு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள பதிவ்

மசோதாவை அவை நிறைவேற்றினால் அது செலவுகளை அதிகரிக்கும். அடுத்த தலைமுறையினருக்கும், தொழிலாளர் வர்க்க குடும்பங்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும். எனவே இன்றே உங்கள் பிரதிநிதியை இந்த மசோதாவை எதிர்த்து ஓட்டளிக்கச் சொல்லுங்கள்.

இவ்வாறு ஒபாமா பதிவிட்டுள்ளார். (ஐ)

## மைக்ரோசாப்ட் நிறுவனத்தில் மேலும் 9 ஆயிரம் பேரை பணி நீக்கம் செய்ய முடிவு




மைக்ரோசாப்ட் நிறுவனத்தில் மேலும் 9 ஆயிரம் பேரை டிஸ்மிஸ் செய்ய முடிவு எடுக்கப்பட்டுள்ளது தெரிய வந்துள்ளது. மைக்ரோசாப்ட் நிறுவனத்தில் 2024 ஜீன் மாத நிலவரப்படி உலகளவில் சுமார் 2, 28,000 ஊழியர்கள் பணியாற்றிவருகிறார்கள். தற்போது மைக்ரோசாப்ட் நிறுவனம் 9,000க்கும் மேற்பட்ட ஊழியர்களை பணிநீக்கம் செய்ய உள்ளது. இது 2வது பெரிய பணி நீக்க அறிவிப்பு ஆகும். கடந்த ஆண்டு மே மாதம் சுமார் 6 ஆயிரம் பேரை பணி நீக்கம் செய்தது.

தற்போது மீண்டும் அதைவிட மிகப்பெரிய அளவில் பணி நீக்க அறிவிப்புகளை வெளியிட்டுள்ளது. தனது ஊழியர்களில் 4மூ அல்லது தோராயமாக 9,100 பேரை பணிநீக்கம் செய்ய முடிவு எடுத்துள்ளதாக சியாட்டில் டைம்ஸ் தெரிவித்துள்ளது. இந்த பணி நீக்கம் குறித்த ராய்ட்டர்ஸ் கேள்விகளுக்கு மைக்ரோசாப்ட் நிறுவனம் உடனடியாக பதிலளிக்கவில்லை. (ஐ)

## இந்தோனேசியாவின் பாலி தீவில் 65 பயணிகளுடன் சென்ற படகு கவிழ்ந்து நான்கு பேர் உயிரிழப்பு..!!



இந்தோனேசியாவின் பாலி தீவில் 65 பயணிகளுடன் சென்ற படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 4 பேர் உயிரிழந்துள்ளனர். படகு கவிழ்ந்து தண்ணீரில் மூழ்கியவர்களில் 23 பேர் மீட்கப்பட்டுள்ள நிலையில் 38 பேரை காணவில்லை என தகவல் வெளியாகி உள்ளது. (ஐ)

# செங்கடலில் கச்சா எண்ணெய் எடுக்கும் கப்பல் மூழ்கி 4 பேர் பலி: 23 பேர் காயங்களுடன் மீட்பு



செங்கடலில் கச்சா எண்ணெய் எடுக்கும் கப்பல் மூழ்கி 4 பேர் பலியாகினர். 23 பேர் காயமடைந்தனர். 3 பேரை தேடும் பணி நடந்து வருகிறது. எகிப்து நாட்டின் ராஸ் கரீப் துறைமுகம் அருகே செங்கடலில் கச்சா எண்ணெய் எடுக்கும் பணியில் சவுதி அரேபியா நாட்டின் கப்பல் ஒன்று ஈடுபட்டிருந்தது. அந்த கப்பலில் 30 ஊழியர்கள் இருந்தனர். நேற்று முன்தினம் திடீரென கப்பல் கடலில் மூழ்கியது. இந்த விபத்தில் 4 பேர் பலியாகினர். 23 பேர் காயங்களுடன் மீட்கப்பட்டனர். கப்பலில் பணியாற்றிய 3 பேரை காணவில்லை.

சூயஸ் கால்வாய் ஆணையத்தின் தலைவர் ஒஸ ாமா ரபி கூறுகையில்,"சூயஸ் கால்வாயின் தெற்கு நுழைவாயிலில் இருந்து 130 கடல்மைல் தொலைவில் விபத்து நிகழ்ந்தது. எண்ணெய் எடுக்கும் கப்பல் மூழ்கியதால் சூயஸ் கால்வாயில் சரக்கு போக்குவரத்து பாதிக்கப்படவில்லை. கப்பல் மூழ்கியது குறித்து விசாரணை நடந்து வருகிறது" என்றார். இதுகுறித்து செங்கடல் மாகாண ஆளுநர் அமீர் ஹனாபி," இந்த விபத்தில் மாயமான 3 ஊழியர்களை தேடும் பணி தீவிரமாக நடக்கிறது. கடலில் மூழ்கியவர்களை மீட்கும் பணியில் எகிப்து கடற்படை வீரர்கள் ஈடுபட்டுள்ளனர். விபத்தில் காயமடைந்தவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்" என்றார். (ஐ)

## மனைவி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச்சம்பவம்சமயபுரம்பகுதியில்நேற்று புதன்கிழமை இரவு 7.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, வவுனியா, சமயபுரம் பகுதியில் உள்ள வீட்டுக்கு இரவு வருகை தந்த உயிரிழந்த நபர் வீட்டில் இருந்த பெண்ணையும் அவரது தாயாரையும் கத்தியால் குத்திக் காயப்படுத்தியுள்ளார்.

அதனைத் தொடர்ந்து வீட்டைத் தீயிட்டுக் கொளுத்தியுள்ளார்.

இதனால் படுகாயமடைந்த இரு பெண்களும் அங்கிருந்தவர்களால் மீட்கப்பட்டு வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் இந்தக் குற்றச் செயலைப் புரிந்துள்ள சந்தேகநபரான குடும்பஸ்தர் அந்த வீட்டின் கிணற்றில் வீழ்ந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அவர் தவறான முடிவெடுத்து கிணற்றில் வீழ்ந்தாரா அல்லது வேறு ஏதும் குற்றச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதா என்பது தொடர்பாக பொலிஸாரால் தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை, உயிரிழந்த குடும்பஸ்தரும், படுகாயமடைந்த பெண்ணும் வெவ்வேறு பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனக் கிராம மக்கள் தெரிவித்துள்ளதுடன் அவர்கள் இருவரும் கணவன், மனைவியாகக் கடந்த ஒரு வருட காலமாக சமயபுரம் பகுதியில் வசித்து வந்தனர் எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

அத்துடன் அவர்கள் இருவரும் ஏற்கனவே வெவ்வேறு திருமணங்களை முடித்துள்ளனர் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

சம்பவத்தில் வசந்தி (வயது30), அவரது தாயாரான இந்திரா (வயது 69) என்ற இரு பெண்கள் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கிருஷ்ணகுமார் (வயது 45) என்ற நபர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## இராமேஸ்வரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இராமேஸ்வரம் மீனவர்கள் 8 பேரினுடைய வழக்கு இன்று மன்னார் மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது

வழக்கை விசாரித்த மன்னார் மாவட்ட நீதிவான், இராமேஸ்வரம் மீனவர்கள் 8 பேரையும் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். கடந்த 29 ஆம் திகதி இராமேஸ்வரம் பகுதியில் இருந்து இயேசு என்பவருக்குச் சொந்தமான விசைப்படகில் மேற்படி 8 மீனவர்களும் எல்லை தாண்டி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இதேவேளை, இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் 23 படகுகளுடன் 174 இந்திய மீனவர்கள் கைதாகியுள்ளன

## துப்பாக்கிச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆண்கள் இருவரை இலக்கு வைத்து இன்று காலை இந்தத் துப்பாக்கிச்சூடு இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த இருவரும் ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், அதில் ஒருவர் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்துள்ளார் என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

மேலும், இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த மற்றைய நபர் மறைந்த முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவின் பிரத்தியேகச் செயலாளராகப் பணியாற்றிய சமீரா மனஹார என்பது குறிப்பிடத்தக்கது.

## மேர்வின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா உள்ளிட்ட மூவரும் கம்பஹா மேலதிக நீதவான் டபிள்யூ கே டி விஜேரத்ன முன்னிலையில் இன்று ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா கிரிபத்கொடை பிரதேசத்தில் உள்ள காணி ஒன்றுக்குப் போலி ஆவணைங்களைத் தயாரித்து பண மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் பத்தரமுல்லை பிரதேசத்தில் உள்ள அவரது வீட்டில் வைத்து கடந்த மார்ச் மாதம் 5ஆம் திகதி குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் இன்று பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## செம்மணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்த மனிதப் புதைகுழிக்கு நீதி கிடைக்க வேண்டும். வழக்கு விசாரணை இடம்பெறுவதால் மேலதிக தகவல்களை வெளியிட முடியாது." - என்றார்.

## கச்சதீவை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

"கச்சதீவு என்பது தற்போது இலங்கைக்குச் சொந்தமான தீவாகும். தென்னிந்திய அரசியலில் கச்சதீவு அரசியல் துரும்புச்சீட்டாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

எப்படி இருந்தாலும் கச்சதீவு இந்தியாவுக்கு வழங்கப்படமாட்டாது. அதனை மீளக் கையகப்படுத்தவும் முடியாது. அது எமது மண்ணுக்குச் சொந்தமாகும்." - என்றார்.

# ஊடகவியலாளர் மப்றூக் மீது பிரதேச சபை உறுப்பினர் தாக்குதல்

ஊடகவியலாளர் யூ.எல். மப்றூக் மீது, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அட்டாளைச்சேனை பிரதேச சபை உறுப்பினர் றியா மசூர் என்பவர் தலைமையிலான குழுவினர் புதன்கிழமை இரவு தாக்குதல் நடத்தியதாக அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தனது நண்பர்களுடன் ஊடகவியலாளர் மப்றூக் அட்டாளைச்சேனை பொது மைதானத்துக்கு அருகில் பேசிக் கொண்டிருந்த போது, அங்கு காரில் வந்த அட்டாளைச்சேனை பிரதேச சபை உறுப்பினர் றியா என்பவரும், இன்னுமிருவரும் மப்றூக் மீது எதிர்பாராத விதமாக தாக்குதல் நடத்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

"என்னைப்பற்றி எப்படி நீ செய்தி எழுதுவாய்" எனக் கேட்டவாறே, மப்றூக் மீது றியா மசூர் என்பவர் தாக்குதல் நடத்தியதாக, பொலிஸ் முறைப்பாட்டில் ஊடகவியலாளர் மப்றூக் கூறியுள்ளார்.

றியா மசூர் மற்றும் அவருடன் வந்தவர்கள் மது அருந்தியிருந்ததாகவும் முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

றியா மசூர் அழைத்து வந்தவர்களுக்கு எதிராக, ஏற்கனவே பொதுமக்களைத் தாக்கியமை மற்றும் போதைவஸ்து பாவனை உள்ளிட்ட பல்வேறு முறைப்பாடுகள் உள்ளதாகவும் தெரியவருகிறது.

அட்டாளைச்சேனை பிரதேச சபைத் தவிசாளர் ஏ.எஸ்.எம். உவைஸ் உள்ளிட்ட தனது நண்பர்களுடன் ஊடகவியலாளர் பேசிக் கொண்டிருந்த வேளையிலேயே இந்தத் தாக்குதல் நடந்துள்ளது.

இதன்போது அங்கிருந்தவர்கள் தாக்குதலை தடுத்து நிறுத்தியதாகவும், இல்லாவிட்டால் ஊடகவியலாளருக்கு - மேற்படி காடையர்கள் உயிராபத்தை ஏற்படுத்தியிருக்கக் கூடும் எனவும் சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் கூறுகின்றனர்.

மேலும் தாக்குதலை மேற்கொண்ட றியா மசூர் என்பவர், தனக்கு உயிர் அச்சுறுத்தல் விடுத்து விட்டுச் சென்றதாகவும், ஊடகவியலாளர் மப்றூக் தனது முறைப்பாட்டில் மேலும் தெரிவித்துள்ளார்.

(ஐ)

# பஸ் விபத்தில் 15 பேர் காயம்



கண்டி, ஜூலை 03

கண்டி, வத்தேகம, அரலிய உயன பிரதேசத்தில் இடம்பெற்ற பஸ் விபத்தில் 15 பேர் காயமடைந்துள்ளனர் என்று வத்தேகம பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து இன்று வியாழக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்று வீதியை விட்டு விலகி குடைசாய்ந்ததில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

வத்தேகமவில் இருந்து குடுகல நோக்கிப் பயணித்த இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸே விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தின் போது பஸ்ஸில் 25 பேர் பயணித்துள்ள நிலையில் அவர்களில் 15 பேர் காயமடைந்து வத்தேகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து தொடர்பில் வத்தேகம பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வேளமாலிகிதனைக் கட்சியிலிருந்து தூக்குவதற்குத் தமிழரசு பரிசீலனை

கிளிநொச்சி, ஜூலை 03

கிளிநொச்சி, கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் அருணாசலம் வேளமாலிகிதனை கட்சியில் இருந்து நீக்க இலங்கைத் தமிழரசுக் கட்சி பரிசீலனை செய்துள்ளது.

கட்சியில் இருந்து நீக்கப்பட்ட ஜீவராசா என்பவர் அடங்கலாக வடக்கு மாகாண ஆளுநரைச் சந்தித்தமை தொடர்பில் ஒரு வார காலத்தினுள் விளக்கம் கோரி கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரனால் வேளமாலிகிதனுக்குக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

அந்த விளக்கம் கோரல் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"கடந்த 19.06.2025 அன்று தாங்களும் இன்னும் மூவரும் வடக்கு மாகாண ஆளுநரைச் சந்தித்து உரையாடியதாக அறியக் கிடைத்தது. அந்த மூவரில் ஒருவர் அண்மையில் கட்சியில் இருந்து விலக்கப்பட்ட ஜீவராசா என்றும் அறியக்கிடைத்தது. இவர் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் எமது கட்சிக்கு எதிராகச் சுயேச்சையாகப் போட்டியிட்டவர். கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலிலும் எமக்கு எதிராகப் போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்தவர் என்பதும் நீங்கள் நன்கு அறிந்த விடயங்கள்.

வெளிப்படையாகவே கட்சிக்கு எதிராகச் செயற்படும் ஒருவர் உத்தியோகபூர்வ சந்திப்பு ஒன்றில் உங்களுடன் சேர்ந்து கலந்துகொள்வதும் அது பகிரங்க செய்தியாக வெளிவருவதும் கட்சி நலனை வெகுவாகப் பாதிக்கும் என்பது தாங்கள் அறிந்திருக்க வேண்டியதொன்று.

கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தங்களுக்குப் போட்டியிடச் சந்தர்ப்பம் வழங்க முன்னர் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கட்சியின் தீர்மானத்துக்கு மாறாகச் செயற்பட்டமைக்குத் தாங்கள் மன்னிப்பு கோரியதோடு எதிர்காலத்தில் இப்படியான குற்றத்தைச் செய்தால் எவ்வித விசாரணையும் இன்றி கட்சியில் இருந்தும் கட்சி சார்பில் வகிக்கும் பதவியில் இருந்தும் உடனடியாக நீக்கப்படுவதற்கு உங்களது ஒப்புதலை வழங்கியுள்ளீர்கள்.

ஆகவே ஜீவராஜா போன்ற ஒருவரை ஆளுநரைச் சந்திக்கச் சென்ற உத்தியோகபூர்வ குழுவில் சேர்த்துக்கொண்ட குற்றத்துக்காக நீங்கள் ஏன் கட்சியில் இருந்து நீக்கப்படக்கூடாது என்பதற்குக் காரணம் காட்டி ஒரு வார காலத்துக்குள் எழுத்து மூலம் எனக்குப் பதில் அனுப்பி வைக்கப்பட வேண்டும். இல்லையெனில் அல்லது திருப்திகரமான பதில் அளிக்காவிட்டால் நீங்கள் கட்சியில் இருந்து உடனடியாக நீக்கப்படுவீர்கள் என்பதை இத்தால் தங்களுக்கு அறியத் தருகின்றேன்." - என்றுள்ளது.

# வவுனியா விபுலானந்தாக் கல்லூரி மைதானத்துக்கு காணி வழங்க ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் முடிவு

வவுனியா, ஜூலை 03

வவுனியா விபுலானந்தாக் கல்லூரிக்கு விளையாட்டு மைதானத்துக்கான காணி வழங்குவதற்குப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வவுனியா பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று புதன்கிழமை மாலை மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது, தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன், "வவுனியா, பண்டாரிக்குளம் விபுலானந்தாக் கல்லூரிக்கு விவசாயக் காணியை மைதானத்துக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கமநல அபிவிருத்தித் திணைக்களம் அதனை விடுவிக்க இணக்கம் தெரிவித்துள்ளது. காணி ஆணையாளருக்கும் விடுவித்து தருமாறு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

எனவே, பிரதேச செயலக மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அனுமதி பெற வேண்டியுள்ளது. அதனை விடுக்கத் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்." - என்று கோரினார்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினரின் கோரிக்கை ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்தக் காணியை வழங்கத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08. Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.07.2025 வெளியிடப்பெற்றது.